සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

තෙවන වාර පරීක්ෂණය
மூன்றாம் தவணைப் பரீட்சை **- 2026**
**Third Term Test**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / **Grade** } 13 | විෂයය / பாடம் / **Subject** } இந்துநாகரிகம் | පත්‍රය / வினாத்தாள் / **Paper** } I | පැය / மணித்தியாலம் / **Hours** } 3 |

**அறிவுறுத்தல்கள்:**

► எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**01.** பண்பாட்டிற்கும் சமயத்திற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு பற்றி கூறியவர்.

(1) T. K. சிதம்பரமுதலியார் (2) சேர்.ஜோசர் மார்புல் (3) T. S. எலியட்

(4) எட்வாடடெய்யர் (5) டாக்டர் மா.இராசமாணிக்களார்

**02.** சிந்து நதிபாயும் பகுதியானது புகை பொருள் ஆய்வாளரக் ளால் அகழ்வாராட்சிக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதி

(1) கி.பி.1900 - கி.பி.1930 (2) கி.பி.1922 - கி.பி.1928 (3) கி.பி.1922 - கி.பி.1932

(4) கி.பி.1920 - 1930 (5) கி.பி.1930 - 1932

**03.** செய்யுள் நடையிலும் உரைநடையிலும் அமைந்த மந்திரங்களைக் கொண்ட வேதம்

(1) இருக்கு வேதம் (2) யசுர் வேதம் (3) சாம வேதம்

(4) அதர்வ வேதம் (5) வைணவ வேதம்

**04.** பெண்களின் நல்வாழ்வு பற்றிய ''ஸ்திரீகரம் ாணி'' என்ற மந்திரம் இடம் பெறும் நூல்

(1) இருக்கு வேதம் (2) பிராமணங்கள் (3) அதர்வ வேதம்

(4) ஆரணியம் (5) மகாபாரதம்

**05.** சங்க காலத்தில் இந்து சமயப் பண்பாட்டை வெளிப்படுத்தும் ஆதாரங்களாக விளங்கும் நூல்கள் எவை?

(1) திருமுருகாற்றுப்படை, பரிபாடல் (2) அகநானூறு, புறநானூறு

3) திருமுருகாற்றுப்படை, புறநானூறு (4) பரிபாடல், கலித்தொகை

5) கலித் தொகை, அகநானூறு

**06.** ''மனச்சாட்சியை விட உயர் தர்மம் எதுவும் இல்லை'' எனக் குறிப்பிடும் நூல் எது?

(1) அகநானூறு (2) புறநானூறு (3) பரிபாடல்

(4) கலித் தொகை (5) திருமுருகாற்றுப்படை

**07.** ‘சித்திரகாரப்புலி’ எனும் விருதுப் பெயர் பெற்ற மன்னன்

(1) இராஜராஜசோழன் (2) மாமவீபன் (3) மகேந்திர வர்மன்

(4) சிம்ம விஷ்ணு (5) நந்தி வர்மன்

**08.** வைணவ ஆலயங்களக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன

(1) தேவதானம் (2) திருவிடையாட்டம் (3) சதுர்வேதி மங்கலம்

(4) மங்களாசனம் 5) சதுர்வேதி

**09.** “பாம்பு கயிறாக தோன்றும்” என்ற உதாரணத்தைக் குறிப்பிடும் வாதம்

(1) விவர்த்தவாதம் (2) சூனியவாதம் (3) அவர்சேதவாதம்

(4) பிரதிவிம்பவாதம் (5) ஏகான்மவாதம்

**10.** முல்லை நிலத்ததுக்குரிய தெய்வமாக சங்க இலக்கியங்களில் போற்றப்படுபவன்

(1) வருணன் (2) திருமால் (3) இந்திரன் (4) சூரியன் 5) முருகன்

**11.** மங்களாசனம் பெற்ற திவ்விய தேசங்களின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டவர்கள்

(1) சித்தர்கள் (2) சந்தானகுரவர்கள் (3) ஆழ்வார்கள்

(4) சமயகுரவர்கள் (5) சிவாச்சாரியார்கள்

**12.** சாக்த ஆகமத்துக்குரிய சிறப்புப் பெயர்

(1) சங்கிதை (2) தந்திரங்கள் (3) சிராணம்

(4) பஞ்சராத்திரம் (5) பிரம்ம சூத்திரம்

**13.** “வேதம் வேறு தேவாரம் வேறு” என்ற சர்ச்சைக்கு முடிவு கட்டியவர்

(1) அருணாசலதேசிகன் (2) பண்டிதமணி கணபதிப்பிள்ளை

(3) காசிவாசி செந்திநாதையர் (4) கைலாச நாதக் குருக்கள்

(5) சுவாமி விபுலானந்தர்

**14.** “கற்ற கல்வி பிறரைப் பாதிக்கக் கூடாது அது உயிர்ப்பூட்டுவது உயிர்ப்பூட்டுவதும், உண்மையைக் காட்டுவது, தன்னம்பிக்கையைத் தருவது” எனும் கொள்கை உடையவர்

(1) சுவாமி விவேகானந்தர் (2) சுவாமி விபுலாானந்தர் (3) ஆறுமுகநாவலர்

(4) மகாத்மா காந்தி (5) காசிவாசி செந்திநாதையர்

**15.** திருக்கேதீச்சர ஆலயத்தில் வீற்றிருந்து அருள் புரியும் இறைவி

(1) மாதுமையாள் (2) கௌரிஅம்பாள் (3) பார்வதி அம்மை

(4) நகுலாம்பிகை (5) வடிவாம்பிகை

**16.** யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்த ஆரியச்சக்கர வர்த்திகளின் இனச் சின்னமாக விளங்கியது

(1) வில் அம்பு (2) நந்தி (3) யானை (4) மயில் (5) சிங்கம்

**17.** பிராமணிய வழிபாட்டையும் நாட்டார் வழிபாட்டையும் இணைத்துக் கூறும் நூல் எது?

(1) பரிபாடல் (2) கலித் தொகை (3) திருமுருகாற்றுப்படை

(4) புறநானூறு (5) அகநானூறு

18. ஆலய கிரியைகளின் போது இடம்பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை

(1) கர்வுணம் (2) பிரதிட்டை (3) உற்சவம்

(4) பிராயச்சித்தம் (5) கும்பாபி'கம்

19. திருவுருங்கள் அளவில் மிகினும் குறையினும் நலமுடையன அல்ல எனக் கூறும் நூல்

(1) சிவாகமங்கள் (2) சங்கிதநீதி (3) வேதங்கள்

(4) புராணங்கள் (5) சிற்பசாஸ்திரம்

20. இந்து இலக்கியஞுள் முதன் நூல்களாக்கவும், பிரமாண நூல்கள் எனவும் கொள்ளப்படுபவை எவை?

(1) புராணங்கள், வேதம் (2) வேதம், ஆகமம் (3) இதிகாசங்கள், ஆகமம்

(4) ஆகமம், இராமாயணம் (5) புராணங்கள், ஆகமம்

21. "கலை உருவாக்கம் என்பது தூய உளச் செயற்பாடு" என சமயத்திற்கும், கலைக்கும் இடையிலான தொடர்பை எடுத்துக் காட்டுபவர்

(1) சுவாமி விபுலானந்தர் (2) காசிவாசி செந்திநாதையர் (3) சுவாமி விவேகானந்தர்

(4) அருணாசல தேசிகர் (5) கலா யோகி ஆனந்த குமாரசுவாமி

22. சூறா வளித்துறவி எனப் போற்றப்படுபவர்

(1) இராமகி'ணபரமஹம்சர் (2) சுவாமி விபுலானந்தர் (3) சுவாமி விவேகானந்தர்

(4) ஆறுமுகநாவலர் (5) திருமூலர்

23. கிழக்கிலங்கையில் சைவப்பணியாற்றிய சைவப்புலவ் அருணாசல தேசிகர் எழுதிய சமய நூல்களைக் கொண்ட தொகுதி

(1) தட்சிணகைலாய புராணம், திருக்கரைசைப் புராணம்

(2) சைவ தூ'ண பரிகாரம், சைவவினாவிடை

(3) சைவ இலக்கிய கதாமஞ்சரி, மெய்ஞானதீபம்

(4) நடராஜ வடிவம், மகாலட்சுமி தோத்திரம்

(5) கந்தபுராண வசனம், இலக்கணச் சுருக்கம்

24. சகமார்க்க நெறியில் நின்று இறைவனை வழிபட்டு முத்தியின்பம் பெற்றவர்

(1) திருநாவுக்கரசு நாயனார் (2) கண்ணப்ப நாயனார் (3) குங்கிலியகலயர்

(4) சுந்தரமூர்த்தி நாயனார் (5) இளையான் குடிமாற நாயனார்

25. "சைவத் திருக்கோயில் கிரியை நெறி" எனும் நூலின் ஆசிரியர்

(1) சுவாமி விபுனாந்தர் (2) பேராசிரியர் கைலாசநாத குருக்கள்

(3) காசிவாசி செந்திநாதையர் (4) அருணாசல தேசிகர்

(5) ஆறுமுக நாவலர்

26. ஆன்மாவைப் பற்றியுள்ள பஞ்ச கோசங்களுள் அடங்காதது

(1) விஞ்ஞானமய கோசம் (2) அன்னமைய கோசம் (3) பிராணமய கோசம்

(4) மனோமய கோசம் (5) ஞானமய கோசம்

**27.** அத்வைதம் குறிப்பிடும் “விஷேபம்” என்பது

(1) உள்ளதை மறைக்கும் இயல்பு (2) உள்ளதைக் காட்டும் இயல்பு

(3) இல்லாததைக் காட்டும் இயல்பு (4) இல்லாததை மறைக்கும் இயல்பு

(5) உள்ளதை உள்ளவாறு வெளிக்காட்டும் இயல்பு

**28.** சித்தாந்த நூல்களுள் மிகப் குறைந்த வெண்பாக்களால் ஆன நூல் எது?

(1) திருவருட்பயன் (2) திருவுந்தியர் (3) கொடிக்கவி

(4) வினா வெண்பா (5) உண்மை விளக்கம்

**29.** இந்திய சிற்பக்கலை இந்தியாவிற்கேயுரியது என்ற கூறியவர்

(1) சேர். ஜோன் மார்ஷல் (2) அலெக்சாண்டர் (3) கன்னிங்காம்

(4) மா. இராசமாணிக்கனார் (5) வில்லியம் ஜோன்ஸ்

**30.** சைவ சித்தாந்தம் குறிப்பிடும் ஆணவத்தின் குணங்களில் கற்பம் குறித்து நிற்பது

(1) கோபம் கொண்டு நினைத்தல் (2) அகங்காரம் மேலிடுதல்

(3) தன்மை விடப்பிறர் ஒவ்வாரெனல் (4) சிரித்தல்

(5) பிடித்ததைப் பிடித்திருத்தல்

**31.** நடராஜ மூர்த்தத்தின் ஊன்றிய திருவடி குறித்து நிற்பது

(1) படைத்தல் (2) காத்தல் (3) அழித்தல் (4) அருளல் (5) மறைத்தல்

**32.** பிரம்ம சமாஷத்தால் உடல் கட்டை ஏறும் பழக்கத்தை சட்டப்படி தடை செய்யப்பட்ட ஆண்டு

(1) 1815 (2) 1817 (3) 1820 (4) 1828 (5) 1829

**33.** சிறிய ஆலம் வதையில் இருந்து பெரிய ஆலமரம் தோன்றுவது போன்று நுண்ணிய பிரமத்தில் இருந்து உலகம் படைக்கப்பட்டது எனக் குறிப்பிடும் உபநிடதம்

(1) முண்டக உபநிடதம் (2) மாண்டூக்கிய உபநிடதம் (3) கட்உபநிடதம்

(4) கேன உபநிடதம் (5) சாந்தோக்கிய உபநிடதம்

**34.** கேவலாதது வைதம் என்ற தத்துவக் கொள்கையை விளக்கியவர்

(1) இராமானுஜர் (2) ஸ்ரீசைதன்யார் (3) வல்லபர் (4) சங்கரர் (5) மத்துவர்

**35.** சங்கரர் “ஜகன்மித்யா” எனக் குறிப்பிடுவது

(1) பிரதம் (2) ஆன்மா (3) உலகம் (4) கன்மம் (5) முத்தி

**36.** பிரமம் ஒன்றே அது பலவாகத் தோற்றம் பெறுவதற்கு சங்கரர் கூறும் காரணம்

(1) அவிந்தை 2) ஆணவம் (3) புலனறிவு (4) மனம் (5) கன்மம்

**37.** “சிற்பங்களால் இழைக்கப்பட்ட ஒரே சோழர் வளாகம்” என்று வர்ணிக்கப்படும் ஆலயம்

(1) சிதம்பரம் (2) ஐராவதேஸ்வரம் (3) தஞ்சைப்பபெருங்கோயில்

(4) திருபுவனேஸ்வரம் (5) கங்கை கொண்ட சோழேச்சரம்

**38.** பாவச் செயல்கள் அதன பிராயத்சித்தம் பற்றிக் கூறும் புராணம்

(1) ஸ்கந்தபுராணம் (2) கருடபுராணம் (3) அக்கினிபுராணம்

(4) சூரியபுராணம் (5) பிரமபுராணம்

**39.** சங்க காலத்தில் ஆரிய திராவிட இணைப்பைப் காட்டும் வழிபாடாக அமைந்தது

(1) சிவவழிபாடு (2) கொற்றவை வழிபாடு (3) நடுகல் வழிபாடு

(4) பாவை நோன்று (5) முருக வழிபாடு

**40.** "திரையீ வித்யா" என்பதில் அடங்குபவை

(1) வேதம், ஆகமம், உபநிடதம் (2) இருக்கு, யசுர், சாமம்

(3) உபநிடதம், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை (4) யசர், சாமம், அதர்வணம்

(5) புராணம், இதிகாசம், தருமசாஸ்திரம்

**41 - 45 வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றிற்கு பொருத்தமானவற்றை அட்டவணையின் I, II, III, IV ஆகிய நிரல்களில் இருந்து தெரிவு செய்க.**

| I | II | III | IV |
|---|---|---|---|
| A வேதாந்தக் கோட்பாடு | F சமயப் பிரசங்கங்கள் மூலம் விழிப்புணர்பு | K கர்மயோகம் | P தேகி |
| B பிரபக்தி மார்க்கம் | G வேள்வி | L ஜீவன் | Q பண்ணிசைக் கச்சேரி |
| C பசு | H இலக்கியச் சான்று | M அக்கினி | R பகவானிடம் சராணகதி அடைதல் |
| D சமய விழாக்களின் நேரடி வர்ணனை | I சதசத்து | N சமய அறிஞர் பேட்டிகள் | S கீது கோவிந்தடிகள் |
| E 33 தெய்வங்கள் | J தாசபோதம் | O மதுபாவனை | T ஏகம் சத்விப்ரா பருதாவதந்தி |

**41.** சைவ சித்தாந்தம் பற்றிய ஆன்மா பற்றிய தொகுதி

(1) PAST (2) EHNT (3) AHLT (4) CILP (5) CHMR

**42.** இந்துப் பண்பாட்டை மக்களிடையே கொண்டு செல்லும் ஊடகங்களின் செயற்பாடுகளைக் கொண்ட தொகுதி

(1) BHMA (2) CFKP (3) EJOS (4) EJLT (5) DFNA

**43.** பகவத்கீதையின் சிறப்பம்சங்களைக் கொண்ட தொகுதி

(1) AHKR (2) CHMR (3) EIMS (4) BGLA (5) EJQT

**44.** வேதகாலத்துடன் தொடர்புடைய தொகுதி

(1) BILT (2) AGMR (3) EIMR (4) EGMT (5) CHMR

**45.** இந்து நாகரிகத்தில் வடஇந்தியவோடு தொடர்புடைய தொகுதி

(1) BJOS (2) BINO (3) DFKP (4) EHLA (5) DEMT

**46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததை தெரிவு செய்க.**

**46.** சைவசித்தாந்தம் கூறும் ஆன்மா

(1) முப்பொருள்களில் சதசிந்து எனப்படுவது பசு

(2) உயிர்களின் எண்ணிக்கைக்கு அளவுண்டு

(3) ஆன்மா மூன்று அவத்தைகளை உடையது

(4) மூன்று மலங்களும் உள்ளவர்கள் சகலர்

(5) ஆன்மாக்கள் ஆணவ முனைப்பில் விளைவளைப் புரிகின்றன.

**47.** இந்து நாகரிகத்துறை வளர பணிபுரிந்த பெரியார் கைலாசநாதக் குருக்கள்

(1) கொழும்பு பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருத மொழி சிறப்புக் கலைமானிப்பட்டத்தினைப் பெற்றவர்

(2) இந்து நாகரித்துறை முதற் பேராசிரியர்

(3) உலக நாடுகளில் இந்துப்பண்பாட்டை வளரச் செய்தார்

(4) இந்து நாகரிக, சமஸ்கிருத உயர் கற்றல் ஆய்வுக்க வித்திட்டவர்

(5) சைவத் திருக்கோயில் கிரியை நெறி விளக்கம் இவரால் எழுதுப்பட்ட நூல்களுள் உள்ளடக்கப்படவில்லை

**48.** இந்து தத்துவ மரபில் பிரம சூத்திரம்

(1) பிரஸ்தான திரையத்தில் அடங்கும் மூன்று நூல்களுள் ஒன்று

(2) உபநிடதங்களிடையே குருசீடர்களுக்கிடையே நிகழ்ந்த உரையாடல் தொகுப்பு

(3) பாரராயணரால் இயற்றப்பட்டது

(4) ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிகாட்டுகிறது

(5) பிரமசூத்திரம் ஆறு அத்தியாயங்களை உடையது

**49.** தென்கிழக்குகாசியா நாடுகளில் பரவிய இந்துப் பண்பாடு

(1) அரசர்கள் தம்மை திருமாலின் அவதாரமாகக் கருதினர்

(2) ஜாவா "ஜனநாதபுரம்" எனப்பட்டது

(3) தைப்பூசம் மிக முக்கியம் பெற்றது

(4) அரச அவையில் தர்ம சாஸ்திரங்கள் முக்கியம் பெற்றன

(5) அகத்தியர் பட்டாடக்குரு என்ற பெயரில் வணங்கப்பட்டார்

**50.** மகா புராணங்கள் மக்கள் மத்தியில் பக்தி மரபை வளர்த்துள்ளன.

(1) மகாபுராணங்கள் இந்துப்பண்பாட்டு கருவூயமாகும்

(2) சைவ, வைணவ புராணங்கள் பிரசித்தமானவை ஆகும்

(3) பஞ்சலட்சணங்கள் தசலட்சணங்களுடன் கூடியனவாகும்

(4) மகாபுராணங்கள் எண்ணிக்கையில் பத்து ஆகும்

(5) அவை விரதம், தவம், தீர்த்தம் தலயாத்திரை பற்றிக் கூறுவனவாகும்

(50 x 2 = 100 புள்ளிகள்)

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

තෙවන වාර පරීක්ෂණය
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026
**Third Term Test**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 13 | විෂයය / பாடம் / Subject: இந்துநாகரிகம் | පත්‍රය / வினாத்தாள் / Paper: II | පැය / மணித்தியாலம் / Hours: 3 |

**அறிவுறுத்தல்கள்:**

- பகுதி I இலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் பகுதி II இலிருந்து எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி - I

**01.** இந்து நாகரிக வரலாற்றில் வேதங்கள் பெறும் முக்கியத்துவத்தினை பின்வரும் தலைப்புகளில் விளக்குக.

(அ) வேதங்களின் வகையும் அமைப்பும்

(ஆ) தத்துவச் சிந்தனைகள்

(இ) தர்மம்

(ஈ) முக்கியத்துவம் (5 × 4 = 20 புள்ளிகள்)

**02.** சோழ பெருமன்னர் காலத்தில் “சைவ சமயம்“ மேன்மையுற்றவாற்றை பின்வரும் தலைப்புகளில் விளக்குக.

(அ) கோயில்களும் நுண்கலை வளர்ச்சியும்

(ஆ) வைணவ நெறி (10 × 2 = 20 புள்ளிகள்)

**03.** இந்துப்பண்பாட்டு மரபில் “சிவாகமங்கள்“ பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புகளில் தருக.

(அ) ஆகமம் என்ற சொல்லின் பொருள் விளக்கம்

(ஆ) ஆலய அமைப்பும் திருவுரு அமைப்பும்

(இ) தத்துவச் சிந்தனை வளர்ச்சி

(ஈ) முக்கியத்துவம் (5 × 4 = 20 புள்ளிகள்)

## பகுதி - II

**04.** சங்கரரின் அத்வைத வேதாந்தத்தின் பிரதான அம்சங்கள் மற்றும் ஆன்மீக விடுதலைக்குரிய வழிமுறைகள் பற்றி விளக்குக.

(20 புள்ளிகள்)

**05.** சைவ சித்தாந்த நோக்கில் ஆன்மாவின் இயல்புகள், ஆன்மீக விடுதலைக்குரிய வழிமுறைகள் பற்றி விளக்குக.

(20 புள்ளிகள்)

**06.** சிவனது நடராச வடிவத்தின் சிறப்பினை அதன் தோற்றப் பொலிவு விளக்கி நிற்கும் தத்துவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் விளக்குக.

(20 புள்ளிகள்)

**07.** இலங்கையில் பாடல்பெற்ற தலங்கள் இரண்டினை எழுதி திருக்கேதீச்சரத் திருத்தலத்தின் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புகளை விளக்குக.

(20 புள்ளிகள்)

**03.** இந்து அறிவியல் வளர்ச்சியில் “மருத்துவச் சிந்தனைகள்” பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.

(20 புள்ளிகள்)